# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜுலை மாத சாதாரணக்கூட்டம் 31.07.2020 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சி 2018-2019 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.88352/- ஐ அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.942/2012/சி1

**தீர்மானம் எண்.2317 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் சுற்றுச்சுவரின் வெளிபுறம் நுழைவு வாயிலின் அருகில் பழமை வாய்ந்த வாகை மரத்தின் கிளைகள் அலுவலக வளாகத்தின் உள் மற்றும் வெளி புறங்களில் படர்ந்து கிடந்ததால், அலுவலக வளாகத்தில் பேருந்து நிலையத்திற்குள் வெளிச்சம் கிடைக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள உயர்கோபுர மின் விளக்கின் ஒளிக்கதிர்கள் மரத்தின் கிளைகள் மீது விழுந்து, பேருந்து நிலையம் மற்றும் சாலப்பகுதிகள் இருளாக காட்சி அளித்ததால், சமூக ஆர்வலர்களால் அது தொர்பான புகைப்படம் ஆணையரின் அலைபேசிக்கு Whatsapp மூலம் அனுப்பப்பட்டது. எனவே பொது நலன் கருதி, மேற்படி மரத்தின் கிளைகளை வெட்டி அகற்றும் பணியினை நகராட்சி சட்ட விதி பிரிவு 15-ன் கீ மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.9000/- ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.670/2020/இ1

**தீர்மானம் எண்.2318 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட தொலைபேசி நிலைய சாலை பகுதியில் உள்ள காருண்யா பள்ளி அலுவலக கட்டிடத்தின் கதவு எண்.1-171/1, வரிவிதிப்பு எண்.148/001/00376 திரு.செய்யது இப்ராகிம் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்டது. ஆனால் 2017-2018 I முதல் கல்வி நிறுவனங்களுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்ட போதும் தவறுதலாக மேற்படி கட்டிடத்திற்கு முதல் தளம் வரிவிதிப்பு எண்.148/001/00750 தரைதளம் வரிவிதிப்பு எண். 148/001/00751 என இரண்டு வரிவிதிப்பும் செய்யப்பட்டது. எனவே ஏற்கனவே உள்ள வரிவிதிப்பு எண். 148/001/00376 திரு.செய்யது இப்ராகிம் பெயரில் உள்ள வரிவிதிப்பை ரத்து செய்வதற்கும், 2018-2019I முதல் 2020-2021 I வரை உள்ள நிலுவைத் தொகை ரூ.6966/-ஐ கணணியிலிருந்து நீக்கம் செய்வதற்கும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7210/2020/அ1

**தீர்மானம் எண்.2319 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.4

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 75 k 6526-ல் பொருத்தப்பட்டுள்ள Air Conditioner-ல் உள்ள மின்விசிறி பழுதடைந்து இயங்காத நிலை ஏற்பட்டதால், அவசர அவசியம் கருதி M/s.Ozone car A/c care & Air conditioner service, Asaripallam நிறுவனம் மூலம் மேற்படி பழுதினை சரி செய்த வகையில் செலவு தொகை ரூ.2850/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது. ந.க.எண்.7057-1/2011/இ1

**தீர்மானம் எண்.2320 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் பயணிகள் வசதிக்காக போடப்பட்டுள்ள இருக்கைகள் பழுதடைந்துள்ளதால், பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பயணிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருவதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக, குளச்சல் கிளை மேலாளரால் தெரிவிக்கப்பட்டது. எனவே அவசர அவசியம் கருதி, பேருந்த நிலையத்தில் பயணிகள் இருக்கை அமைக்கும் பணியினை நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.83,190/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.535/2020/அ1

**தீர்மானம் எண்.2321 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.6

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN 74-74-5508-க்கு பழுது பார்க்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Akshaya Motor, Unnamalai Kadai | ரூ.44916/- |
| 2. | Ganesh Motor Works, Nagercoil | ரூ.44611/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ஐ விட வரிசை எண்.2, Ganesh Motor works, Nagercoil நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதிக்கு.

ந.க.எண்.2913/2009/எச்1

**தீர்மானம் எண்.2322 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.7

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN 74-75P-8399-க்கு பழுதுகள் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் வடசேரி | ரூ.29382/- |
| 2. | அக்சயா மோட்டார்ஸ், உண்ணாமலைக்கடை | ரூ.29500/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2 ஐ விட வரிசை எண்.1, கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், வடசேரி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு.

ந.க.எண்.1406/2014/எச்1

**தீர்மானம் எண்.2323 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.8

அலுவலக உத்திரவு ந.க.எண்.212/2018/எச்1 நாள் 28.06.2019 மற்றும் 20.07.2020-ன் படி, திடக்கழிவு மேலாண்மை திட்டப்ப பணிகளை 45 பணியாளர்களை கொண்டு 01.08.2019 முதல் 31.07.2020 வரை ஒரு வருடத்திற்கு பைரவி பவுண்டேசன், நாகர்கோவில் நிறுவனத்தின் மூலம் பணிகளை செய்திட உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்தின் பணிக்காலத்தை, நிர்வாக நலன் கருதியும், மேற்கண்ட நிறுவனத்தினர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் 01.08.2020 முதல் 31.10.2020 வரை மேற்கொண்டு 3 மாதத்திற்கு பணி நீட்டிப்பும்,அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.19,00,000/-க்கும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவுகளை செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதி எதிர்நோக்கி, தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.212/2018/எச்1

**தீர்மானம் எண்.2324 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்கு மூலதன மானிய நிதி / இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2018-19 திட்டத்தின் கீழ், ரூ.108.00 இலட்சம் மதிப்பீட்டில் குழித்துறையாறு கூட்டு குடிநீர் திட்டத்தில் இருந்து குடிநீர் பெறுவதற்காக ஆலஞ்சி முதல் குளச்சல் வரை 4000 மீட்டர் நீளத்திற்கு 200 mm DI பிரதான குழாய் பதித்தல் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடிநீர் குழாய் பதிக்கும் பட்சத்தில் ரீத்தாபுரம் பேரூராட்சி மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என திரு.S.M.அந்தோணி முத்து குளச்சல் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில், வழக்கு தொடர்ந்துள்ளார். (வழக்கு எண்.WP(MD) No.5928/2020) வழக்கு தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அலுவலக வழக்கறிஞர் திரு.V.R.சண்முகநாதன் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆஜராவது தொடர்பாக அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி வழக்கறிஞர் கட்டணமாக தொகை ரூ.9500/- வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/802/2020

**தீர்மானம் எண்.2325 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.10,17,18,22,25,26,27,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள். 38,39,40,47 முதல் 52,57 முதல் 59 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.25,32 மற்றும் நவீன மீன்சந்தை தரை தளம் கடை எண்கள்.3,4,7,8 முதல் தளம் 1,7 ஆகிய கடைகளுக்கு 27.07.2020-ல் பொது ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் கலந்து கொண்ட ஏலத்தாரர் பெயர் மற்றும் ஏல விபரம் பின்வருமாறு,

**காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.25**

| வ.எண். | ஏலத்தாரர் பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி மாதம் ஒன்றுக்கு | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரரின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | T.விஜயலெட்சுமி | 2200/- | 2200/- T.விஜயலெட்சுமி |
| **கடை எண்.26** | | | |
| 2. | T.விஜயலெட்சுமி | 2200/- | 2200/- T.விஜயலெட்சுமி |

மேற்படி கடை எண்.25,26-க்கு ஒரே ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை.

கலம் (4)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் ஏலம் போகாத கடைகளை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2326 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.11

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை செயல்முறைகள் ந.க.எண் K.Dis No.30726/P3/2017 நாள் 10.01.2018-ன் படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) 45 தினக்கூலி பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்பயில் 45 தினக்கூலி பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு M/s.பைரவி பவுண்டேசன் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் 31.10.2020 -வுடன் முடிவடைவதால், 01.11.2020 முதல் 31.10.2021 வரை ஒரு வருடத்திற்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் 45 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) பணிக்கு அமர்த்துவதற்காக உத்தேச மதிப்பீடு ரூ.108.00 (நூற்று எட்டு இலட்சம்) இலட்சம் (ஊதியம், EPF,ESI,பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட) தொகைக்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.809/2020/எச்1

**தீர்மானம் எண்.2327 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.11

இந்நகராட்சியில் கீழ்குறிப்பிட்டுள்ள விபரப்படியான ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த பணிகள் மேற்கொண்ட வகையில் வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்ய வைப்புத் தொகைகள் காலம் கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால் காலம் கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

விபரம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வேலையின் விபரம் | | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | மொத்தம் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.சி.தேவராஜ் | வார்டு எண்.8-ல் மீனவர் ஓய்வறை பழுது பார்த்தல் | | 4209/- | 4209/- |
| 2. | திரு.சி.தேவராஜ் | 1 | வார்டு எண்.13-ல் மீனவர் ஓய்வறை பழுது பார்த்தல் | 1000/- | |
| | | 2 | வார்டு எண்.10-ல் மீனவர் ஓய்வறை பழுது பார்த்தல் | 1100/- | |
| | | 3 | நகராட்சிக்குட்பட்ட பகுதியில் Signboard அமைத்தல் | 700/- | |
| | | 4 | நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்திரா காலனி பகுதியில் மண்சாலை அமைத்தல். | 400/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 5 | வார்டு எண்.9-ல் வண்ணக்கற்கள் தளம் அமைத்தல் | 2000/- | |
| | | 6 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பந்தவிளையில் வண்ணகற்கள் அமைத்தல் மற்றும் கழிவுநீர் ஓடை, ஓடைக்கான மேல்மூடி அமைத்தல் | 3250/- | |
| | | 7 | வார்டு எண்.14-ல் மீனவர் ஓய்வு அறை பழுது பார்த்தல் | 1000/- | |
| | | 8 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அங்கன்வாடிக்கு LPG Connection கொடுத்தல். | 484/- | |
| | | 9 | வார்டு எண்.12,13-ல் Root Zone Method(SWD) | 4200/- | |
| | | 10 | வார்டு எண்.12-ல் மீனவர் ஓய்வறை பழுது பார்த்தல் | 1000/- | |
| | | 11 | மரமடியில் மீனவர் ஓய்வு அறை பராமர்ப்பு | 1200/- | |
| | | | | | **16634/-** |
| 3. | திரு.சி.தேவராஜ் | 1 | வார்டு எண்.14-ல் மீனவர் ஓய்வு அறை பாராமரிப்பு | 1100/- | |
| | | 2 | இந்நகராட்சி முக்கிய சாலைகளுக்கு Sign board அமைத்தல் | 700/- | |
| | | 3 | இந்நகராட்சி பகுதியில் Root Zone Method (SWD) | 4200/- | |
| | | 4 | வார்டு எண்.13,14 மீனவர் ஓய்வறை பராமரிப்பு | 1000/- | |
| | | 5 | இந்நகராட்சி கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி | 1500/- | |
| | | 6 | வார்டு எண்.12-ல் மீனவர் ஓய்வறை பழுது பார்த்தல் | 1000/- | |
| | | 7 | இந்நகராட்சி பகுதியில் உள்ள அங்கன்வாடிக்கு LPG Connection கொடுத்தல் | 484/- | |
| | | 8 | வார்டு எண்.13-ல் காணிக்கை மாதா ஐஸ் பிளான்ட் எதிரில் வண்ணக்கற்கள் மற்றும் ஓடைக்கான மேல்மூடி அமைத்தல் | 4000/- | |
| | | 9 | இந்நகராட்சி பகுதியில் உள்ள அரசு மருத்துவமனை எதிரில் நிழற்கூடம் அமைத்தல். | 2000/- | |
| | | 10 | இந்நகராட்சி பகுதியில் உள்ள Water Bank பராமரிப்பு | 1300/- | |
| | | 11 | இந்நகராட்சி பகுதியில் உள்ள துறைமுகத்தெருவில் Fish | 1750/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | Auction plot தடுப்பு சுவர் அமைத்தல். | | |
| | | 12 | இந்நகராட்சியில் ஒப்பந்தம் அடிப்படையில் தினக்கூலி பணியாளர்களை பணிக்கு அமர்த்துதல் | 1200/- | |
| | | 13 | வார்டு எண்.6-ல் சிமெண்ட் காங்கிரீட் மற்றும் கல்லறை தோட்டம் அருகில் தளம் அமைத்தல். | 1200/- | |
| | | | | | **21434/-** |
| 4. | S.டேவிட் ராஜ் | 1 | துறைமுகத்தெரு மற்றும் காவடி விளையில் கழிவறை அகற்றுதல் | 70/- (EMD) | |
| | | 2 | இந்நகராட்சி தினசரி சந்தை பராமரிப்பு | 1100/- (EMD) | |
| | | 3 | வார்டு எண்.12-ல் ஆழ்துளை கிணறு பராமரிப்பு | 140/- (EMD) | |
| | | 4 | டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை பராமரிப்பு | 1100/- (FSD) | |
| | | 5 | வார்டு எண்.15-ல் கழிவு நீர் ஓடை மற்றும் வார்டு எண்.8-ல் உள்ள கவறை அகற்றுதல் மற்றும் பராமரிப்பு | 450/- (FSD) + 2250/- (ASD) | |
| | | 6 | இந்நகராட்சி பகுதியில் உள்ள இலப்பவிளை குறுக்கு தெரு சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல். | 4250/- (FSD) | |
| | | 7 | இந்நகராட்சி பகுதியில் உள்ள அழகனார் கோட்டவிளை சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல். | 9000/- (FSD) +12715/- (FSD) | |
| | | 8 | இந்நகராட்சி பகுதியில் உள்ள ஜேசுதாஸ் காலனியில் AVM சானலில் சிறுபாலம் அமைத்தல். | 2000/- (FSD) | |
| | | 9 | இந்நகராட்சி பகுதியில் உள்ள துறைமுகத்தெருவில் சோதனை சாவடி அமைத்தல். | 2500/- (FSD) | |
| | | 10 | இந்நகராட்சி பகுதியில் உள்ள துறைமுகத்தெருவில் 3,4,5-ல் கழிவறை அப்புறப்படுத்துதல் | 70/- (FSD) | |
| | | 11 | இந்நகராட்சி பகுதியில் உள்ள காமராஜர் சாலை குறுக்கு தெருவில் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல். | 2750/- (FSD) | |
| | | 12 | இந்நகராட்சி பகுதியில் உள்ள பள்ளிவிளாகம் குறுக்கு தெருவில் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல். | 3300/- (FSD) | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 13 | இந்நகராட்சி பகுதியில் உள்ள துறைமுகத்தெருவில் மீன் ஏலம் விடப்படும் இடம் அமைத்தல். | 6000/- (FSD) + 30,000/-(ASD) | |
| | | | | | **77695/-** |

ந.க.எண்.783/2019/இ1

**தீர்மானம் எண்.2328 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட சொந்தமான நவீன மீன்சந்தை முதல் தளம் கடை எண்.3,4,5-க்கு குத்தகை காலம் 31.07.2020 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைகிறது. மேற்படி கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்வதற்கான குத்தகை உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/- வீதம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கடைகளுக்கு 01.08.2020 முதல் 31.07.2023 வரை குத்தகை தொகையில் 15% உயர்வு செய்ய மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண். | வரிவிதிப்பாளர் பெயர் | மாதவாடகை | 15% வரிஉயர்வு செய்த வாடகை | வரிஉயர்வு செய்யப்பட்ட பின்னர் மாத வாடகை (மாம் 1-க்கு ஜி.எஸ்.டி தவிர) |
|---|---|---|---|---|---|---|
| 1 | முதல் தளம் 3 | 148/2017008 | A.சசி | 11200/- | 1680/- | 12880/- |
| 2 | முதல் தளம் 4 | 148/2017009 | P.கிரிஜா | 6700/- | 1005/- | 7705/- |
| 3 | முதல் தளம் 5 | 148/2017012 | K.S.நாகராஜன் | 6700/- | 1005/- | 7705/- |

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.2329 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.13

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டில் உள்ள பகிர்மான குழாய், பிரதான குழாய் மற்றும் வால்வு ஆகியவற்றில் 2020-21 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2213 நாள் 27.02.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்காணும் இனத்திற்கான சென்ற ஆண்டு ஒப்பந்த காலம் 30.07.2020-ல் முடிவடைவதால், 01.08.2020 முதல் இந்த ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கான பணி உத்தரவு வழங்குவதற்கு ஏதுவாக 09.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 4.59% அதிகம் ரூ.5,34,290/- |
| 2. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.08% குறைவு ரூ.5,00,241.90/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 2.08% ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே மேற்காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.285/2020/இ2

**தீர்மானம் எண்.2330 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.14

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டில் உள்ள மின் மோட்டார்கள், மின்சாதன பொருட்கள் மற்றும் பேனல் போர்டு ஆகியவற்றில் 2020-21 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2215 நாள் 27.02.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்காணும் இனத்திற்கான சென்ற ஆண்டு ஒப்பந்த காலம் 30.07.2020-ல் முடிவடைவதால், 01.08.2020 முதல் இந்த ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கான பணி உத்தரவு வழங்குவதற்கு ஏதுவாக 09.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.77% அதிகம் ரூ.3,62,340/- |
| 2. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.87% குறைவு ரூ.3,42,630/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 1.87% ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே மேற்காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.284/2020/இ2

**தீர்மானம் எண்.2331 அனுமதிக்கப்படுகிறது.**